## ஆகஸ்ட் - 15

**"நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால் எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்"**

**- 1தெச 5 : 14**

மனதின் சமநிலையை அடைந்திருக்கிற கர்த்தருடைய ஜனங்கள், பலவீனர் சார்பாகவும் தைரியத்தில் குறையுள்ளவர்கள் சார்பிலும், மாத்திரமல்லாமல், எல்லாரிடத்திலும், அதாவது, மிகவும் அதிக தைரியத்தையும், சுயதுணிவையும் கொண்டவர்களிடத்திலும் கூட, அனுதாபத்துடன் நடந்து கொள்ளவும், அவர்கள் சார்பில் பொறுமையை கையாளவும் வேண்டும் என்று இந்த வாக்கியம் குறிப்பாக உணர்த்துகிறது. அறிவின் வளர்ச்சி, இந்த பொறுமையின் குணசீலத்தில் வளர உதவுகிறது. ஏனென்றால், நம்மிடம் பரமபிதா எவ்வளவு பொறுமையுடன் இருக்கிறார் என்பதை அதிகதிகமாக நாம் உயர்வாக மதிக்கும் போது, மற்றவர்களிடமும் அதேமாதிரியான தத்துவத்தை உபயோகிக்க இது, நமக்கு உதவி செய்கிறது. நம்முடைய பரமபிதா நமக்கு தயைசெய்து நம்மை அழைத்திருக்கிறார் என்கிற எண்ணம், அழைப்பு சம்பந்தமாக நாம் எவ்விதமாக கர்த்தரோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதிலும், நெருக்கமான வழியில் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நம்மோடு நடக்க நாடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு எவ்வாறு நாம் உதவியாக இருக்க வேண்டும் என்பதிலும், நம்மைமிகவும் கவனமுள்ளவர்களாக்க வேண்டும்.

**- Z '03, 24(R 3135)**

உண்மையாகவே இந்த போதனை நமக்குத் தகுதியுள்ளதாயும், இந்த குணம் நமக்கு அவசியமானதுமாயிருக்கிறது. நம்முடைய சகோதரருடைய, உலகத்தாருடைய, நமது விரோதிகளுடைய சரீர பிரகாரமான மனது சம்பந்தமான நம் நடத்தை சம்பந்தமான மத சம்பந்தமான குறைகளும் குற்றங்களும் பலவீனங்களும் நாம் நீடிய சாந்தமுள்ளவர்களாய் இருக்க நம்மை அழைக்கின்றன. இந்த குண சீலத்தை விட மிகவும் அடிக்கடி உபயோகிப்பதற்கு அவசியமாயிருக்கும். இரண்டாவதான குணசீலங்கள், உண்மையாகவே மிகவும் சில. அவைகளில் ஏதாவதொன்று இதைப்போல முழுவதும் அவ்வளவு அபூர்வமாகத் தெளிவாகக் காணப்படுகிறதுமில்லை. அப்பியாசிப்பதற்கு அவ்வளவு கஷ்டமானதுமில்லை. ஆகையால், நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், "எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்" என்ற இந்தப்புத்திமதி மிகவும் அவசியமாயிருக்கிறது.

**- P '35, 117.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1கொரி 13:4; 2கொரி 6:4-6; கலா 5:22; எபே 4:1,2; கொலோ 1:11; 3:12,13; 1தீமோ 1:16; 2தீமோ 3:10; 4:2; எபி 6:12,15; யாக் 5:7,8,10.

**கோபுர வாசிப்பு :** Z '03, 23 (R 3135)

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் யாவரிடமும் நீடிய பொறுமையுள்ளவனாயிருந்தேனா? ஏன் எப்படி? பலன்கள் எவை?